[1973 மார்ச் 6

கூட்டுறவு பழம் பயிரிடு பண்ணை

* 259 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத்துறையில் பழம் பயிரிட பண்ணை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

திரு. கே. எ. வகாப்: வேலூரில் உள்ள பழப் பதனிடும் தொழிற்சாலைக்கு இப்படிப்பட்ட பண்ணை ஒன்று வேண்டுமென்று அங்குள்ள அதிகாரிகள் முயற்சி எடுத்து அதற்காக இராணிப் பேட்டையில் 200 ஏக்கர் நிலம் ஒதுக்கித் தருவீர்களா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை ஏற்படுத்தி அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்க இனியாவது அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் அமைக்கப்பட்டிருக்கும் பழம் பதனிடும் தொழிற்சாலை கூட்டுறவுத் துறையில் செயல்பட்டு வருகிறது. ஆனாலும் அது ஒரு முன்னோடித் தொழிற்சாலை. அங்கு சோதனைகள் நடைபெற்றன. தக்காளிப் பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல், மாம்பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல்; அன்னாசிப் பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல் என்று இவைகளை எல்லாம் சோதனை செய்து பார்த்த பிறகு அன்னாசிப் பழத்தைப் பதனிட்டு டின்களில் அடைப்பது லாபகரமாகவும், வெற்றிகரமாகவும் நடக்கும் என்று தெரிந்து அதற்குத் தேவைப்படும் அன்னாசிப் பழம் தற்போது கோளத்திலிருந்து வாங்க வேண்டியிருப்பதால், வட ஆற்காடு மாவட்டத்திலேயே வளர்க்க முடியும் என்பதற்கான சோதனைகளைச் செய்து பார்த்து நன்றாக விளையும் என்பதால் அதை அதிகமாகப் பயிரிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: இத்தகைய பழத் தோட்டங்களை வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன என்பது அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிய வருகிறது. எந்தெந்த இடங்களில் இப்படிப்பட்ட முயற்சிகள்

1973 மார்ச் 6]

மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன? ஜவ்வாது மலையிலும், ஏலகிரி மலையிலும் இதற்கான முயற்சி செய்யப்பட வேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதன் மீது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மலையில்தான் அன்னாசிப் பழம் பயிரிட முடியும் என்பது முன்னாலிருந்த கருத்து. இப்போது அதைச் சாதாரண சமவெளியிலும் தரையிலும் பயிரிட முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தொழிற் சாலைக்குப் பக்கத்தில் இருக்கும் விவசாயிகளே கூடியவரை அதைத் தயாரிக்கும்படி சொல்லியிருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : இந்தப் பழங்களைப் பதம் செய்வதற்கும் ரசம் எடுப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்களா? இந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு பழங்கள் தேவைப்படுகின்றன? எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது? அப்படி எடுக்கப்பட்ட பழங்களில் இந்தக் காரியங்கள் நடைபெற்றால் அது வருஷத்தில் எவ்வளவு லாபம் சம்பாதித்துத் தரும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எவ்வளவு பழங்கள் கிடைத்தாலும் பதனிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்போது அன்னாசிப் பழத்தை ஒரு கிலோ 85 பைசா என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பழங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கேரளத்திலிருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது. கொண்டு வரும் செலவும் அதிகமாகிவிடுகிறது. ஆகவே, வேலூருக்கு அருகாமையில் இருக்கும் இடத்தில் அன்னாசிப் பழங்களைப் பயிரிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த அன்னாசிப் பழங்கள் பயிர் செய்ய எவ்வளவு ஏக்கர் நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன? எந்த இடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் சொன்னது பரிட்சார்த்தமாகப் பயிர் செய்து பார்த்ததில் வெற்றிகரமாக நடந்திருக்கிறது, நன்றாக வளர்ந்திருக்கிறது என்பதாகும். பழம் ஒன்று 1¼ கிலோ அளவுக்கு வேலூருக்குப் பக்கத்தில் இருக்கும் நிலங்களில் விளைவிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு பழம் பயிரிடுகின்றார்களோ அவ்வளவையும் வாங்கிக் கொள்ளுகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இதற்காக கூட்டுறவுப் பண்ணையாக அமைக்காமல்